யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை

# பரிசில் நாள் – 2017

## தலைமை

திரு.ச.கிருஷ்ணன் அவர்கள்

(வித்தியாலய முதல்வர்)

## முதன்மை விருந்தினர்

திரு.திருமதி றேகன் மேர்வின் அவர்கள்

(கனடா வாழ் பாடசாலை நலன்விரும்பி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை

# பரிசில் நாள் – 2017

## தலைமை

திரு.ச.கிருஷ்ணன் அவர்கள்

(வித்தியாலய முதல்வர்)

## முதன்மை விருந்தினர்

திரு.திருமதி நேகன் மேர்வின் அவர்கள்

(கனடா வாழ் பாடசாலை நலன்விரும்பி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பாடசாலைச் சமூகம்

யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை மேலைத்தேய
வாத்திய அணியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை

# பரிசில் நாள் -2017(2016)

காலம் :- 13.07.2017(வியாழக்கிழமை)
இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்
நேரம் :- பி.ப 1.45மணி
தலைமை :- திரு.ச.கிருஷ்ணன (வித்தியாலயமுதல்வர்)

## முதன்மை விருந்தினர்

**திரு.திருமதி றேகன் மேர்வின்** அவர்கள்
(கனடா வாழ்பாடசாலை நலன்விரும்பி )

## சிறப்பு விருந்தினர்கள்

**திரு .P.சிவானந்தன்** அவர்கள்
(ஆசிரிய கல்வியியலாளர்ஆசிரியமத்திய நிலையம் வரணி )

**திரு.க.கேசவரூபன்** அவர்கள்
(அபிவிருத்தி உத்தியோகத்தர் முதல்அமைச்சின் செயலாளர் அலுவலகம் வடமாகாணம் )

## கௌரவ விருந்தினர்கள்

**திரு.த.அப்புத்துரை அவர்கள்**
(பாடசாலையின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் )

**திரு.க.வே.இராஜதுரை அவர்கள்**
(பாடசாலையின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் )

**திரு.சு.சுதாகரன் அவர்கள்**
(மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலைய தலைவர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

மட்டுவில் வடக்கில்
மாண்புடன் விளங்கும்
அரசினர்வித்தி யாலயமே
எட்டுத் திக்கிலும் அதன்
புகழ்ஓங்கி விளங்க
எழில் பெற வாழ்த்துவோமே (மட்டுவில்)

இல்ல விளையாட்டு
இயல் இசை நாடகம்
இணைந்தே இனிது கற்றுத் தந்திடும் அன்னையை
எழில் பெற வாழ்த்துவோமே (மட்டுவில்)

செந்தமிழ் ஆங்கிலம் இந்து சமயமுடன்
சுற்றாடல் அழகியல் ஆரம்பக்கல்வியும்
உடற்கல்வியும் உவக்கும் அன்னையை
எழில் பெற வாழ்த்துவோமே (மட்டுவில்)

அறிவுடன் உண்மை அன்பு அடக்கம் நேர்மை
அனைத்தும் அளிக்கும் அன்பு ஆசான்கள் வாழ்க
உத்தமராக்கும் அன்னையை
எழில் பெற வாழ்த்துவோமே
எம்மை உத்தமராக்கும் அன்னையை
எழில் பெற வாழ்த்துவோமே (மட்டுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவரல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- கொடியேற்றல்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- விருந்தினர் உரை
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை
## பாடசாலை இலச்சினை

**மகுடவாசகம்**

**"கல்வி அழகே அழகு"**

## நோக்கக் கூற்று ~ VISION

ஆரம்பக்கல்விக்குரிய தேர்ச்சிகளின் அடிப்படையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் ஊடாக பண்பாடுகளையும் விழுமியங்களையும்பேணி சமூகத்திற்கு உதவும் நற்பிரஜையாக மிளிரச் செய்தல்.

## பணிக் கூற்று ~ MISION

"கல்வியழகே அழகு" என்ற மகுடவாசகத்திற்கு அமைவாக தேசிய கல்விக்கொள்கை முறைக்கு ஏற்ப கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைபாடவிதான செயற்பாடுகளையும், அடிப்படைக் கணிணி அறிவையும், நற்சிந்தனைகளையும் மாணவர்களின் அறிவுப்புலத்திற்கு ஏற்ப பொருத்தமான முறையில் வழங்கி சமூகத்திற்கு பொருத்தமான நற்பிரஜைகளை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRINCIPAL




திரு.ச.கிருஷ்ணன் அவர்கள்

**SLPS III**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 பரிசில் நாள் அறிக்கை

எமது பாடசாலையின் இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் நலன்விரும்பியான கனடாவாழ் திரு.திருமதி.றேகன் மேர்வின் அவர்களே, நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் ஆசிரிய கல்வியியலாளர் திரு.P.சிவானந்தன் அவர்களே, அபிவிருத்தி உத்தியோகத்தரும் வடமாகாண முதலமைச்சின் செயலாளர் அலுவலரான திரு.க.கேசவரூபன் அவர்களே, கௌரவவிருந்தினராக வருகை தந்திருக்கின்ற எமது பாடசாலையின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர்களான திரு.த.அப்புத்துரை அவர்களே, திரு.வே.இராசதுரை அவர்களே, மோகனதாஸ் சனசமூக நிலைய தலைவரான திரு.சு.சுதாகரன் அவர்களே, எமது வலயப்பணிமனை உத்தியோகத்தர்ளே, இப்பாடசாலையில் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, அபிவிருத்திக்குழு நிர்வாகிகளே, பழைய மாணவர் சமூக நிர்வாகிகளே, நலன் விரும்பிகளே, பெற்றோர்களே, பழையமாணவர்களே, ஏனைய உத்தியோகத்தர்களே சனசமூக நிலைய நிர்வாகிகளே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, அன்பான மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது உளங்கனிந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றேன். இப்பரிசில் நாளை சிறப்பிக்க வருகைதந்திருக்கும் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை விருந்தினர்களே!

எமது பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் எமது அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் கனடா வாழ் நலன் விரும்பிகளான புதுமணத்தம்பதிகள் திரு.திருமதி.றேகன் மோர்வின் அவர்களே!

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து கொண்டிருக்கும் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் இப்பிரதேசம் மிளிர்வதற்கு அன்றிலிருந்து இன்று வரை பல்வேறு சேவையாற்றி வருகின்றீர்கள். வைத்தியத்திலும் சரி, பொதுப்பணிகளிலும் சரி இன்முகம் காட்டி அன்புடன் வரவேற்கும் குடும்பத்தின் மகனான தாங்களும் தங்கள் குடும்பமும் இப்பரிசில் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு விருந்தினர் அவர்களே!

இன்றைய எமது பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்விற்கு வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி ஆசிரியர் மத்திய நிலைய ஆசிரிய கல்வியியலாளர் திரு.P.சிவானந்தன் அவர்களே, தாங்கள் எமது தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காகப்பாடுபட்டு அதனை நிவர்த்தி செய்வதன் மூலம் இப்பிரதேசத்தின் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருக்கின்றீர்கள் என்பது யாவரும் அறிந்ததே. கல்விப்புலத்திலே ஊறி கல்விக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தாங்கள் இன்று எமது பரிசில்தின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிப்பதையிட்டு நாமும் எமது பாடசாலைச் சமூகத்தினரும் மகிழ்வடைகின்றாம்.

இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினர் வரிசையில் எமது பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்விலே கலந்து கொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமாகாண முதலமைச்சின் செயலாளர் அலுவலரான அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.க.கேசவரூபன் அவர்களே, கிளிநொச்சிப் பிரதேசத்தின் மகனாக உதித்து வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் பயின்று இன்று யாழ் மண்ணின் அபிவிருத்திக்காக உழைத்துக் கொண்டிருக்கும் தாங்கள் எமது பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ விருந்தினர்களே!

இன்றைய பரிசில் தினத்தில் கௌரவ விருந்தினராக வருகைதந்திருக்கின்ற இப்பாடசாலையின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் திரு.த.அப்புத்துரை அவர்களே, இப்பிரதேசத்தின் கல்விநிலைக்கு சுமார் 17 வருட காலமாக சிறந்த கல்விக்கு அடிக்கல் இட்டு சென்றமை யாவரும் அறிந்த உண்மையாகும். அது மட்டுமல்லாமல் அன்றிலிருந்து இன்று வரை எமது பாடசாலையின் ஒவ்வொரு விழாவிலும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிப்பது மட்டுமல்ல எமது பாடசாலையின் இறுதித்தேர்வான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தகுந்த பரிசில்கள் வழங்கி பாராட்டி வரும் தாங்கள் இந்த நிகழ்விலே கலந்துகொண்டு சிறப்பிப்பதையிட்டு பாடசாலை சமூகம் பெருமகிழ்வடைகின்றது.


இன்றைய பரிசில் தினத்தில் கௌரவவிருந்தினர் வரிசையில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் திரு.வே.இராசதுரை அவர்களே, எமது பாடசாலையில் 8 வருட காலமாக கல்விப்புலம் சிறந்து விளங்க தங்களது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி வந்தர்கள். அன்றில் இருந்து இன்று வரை எமது பாடசாலையின் எல்லா நிகழ்விலும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பிப்பது மட்டுமல்ல ஒவ்வொரு வருட வாணி விழாவிலும் கலந்து கொண்டு இப்பிரதேசத்தின் குழந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கும் தாங்கள் இப்பரிசில் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு இப்பிரதேசமே பெருமகிழ்வடைகின்றது.

கௌரவவிருந்தினர் வரிசையில் எமது பாடசாலையின் பரிசில் நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் திரு.சு.சுதாகரன் அவர்களே ஒரு பிரதேசத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சிக்கு அடி அத்திவாரமாக இருப்பனவற்றுள் சனசமூக நிலையமும் ஒன்றாகும். அந்த வகையில் எமது பிரதேசத்தில் மிளிர்ந்து கொண்டிருக்கும் சனசமூகநிலையமான மோகனதாஸ் சனசமூக நிலையம் இப்பிரதேசத்தின் கல்வி நிலைக்கு பெரும் பங்காற்றுவதற்கு உழைத்துக் கொண்டிருக்கும் தாங்கள் இப்பரிசில் தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.



பாடசாலை மேலைத்தேய வாத்திய
அணியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வித்தியாலய ஆளணி விபரம்-2017

- அதிபர் - 01
- நிரந்தர ஆசிரியர்கள் - 06

## எமது வித்தியாலய மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | ~~8~~ 06 | ~~11~~ 03 | ~~19~~ 09 |
| 2 | ~~7~~ 8 | ~~3~~ 11 | ~~10~~ 19 |
| 3 | ~~8~~ 8 | ~~5~~ 3 | ~~13~~ 11 |
| 4 | ~~7~~ 8 | ~~7~~ 5 | ~~14~~ 13 |
| 5 | ~~8~~ 7 | ~~-~~ 7 | ~~8~~ 14 |
| மொத்தம் | ~~38~~ 37 | ~~26~~ 29 | ~~64~~ 66 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பரம்பல்

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 2007 | 31 | 26 | 57 |
| 2008 | 28 | 27 | 55 |
| 2009 | 26 | 28 | 54 |
| 2010 | 36 | 34 | 70 |
| 2011 | 39 | 32 | 71 |
| 2012 | 39 | 30 | 69 |
| 2013 | 44 | 19 | 63 |
| 2014 | 47 | 23 | 70 |
| 2015 | 43 | 19 | 62 |
| 2016 | 41 | 19 | 60 |
| 2017 | 38 | 26 | 64 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மாணவர்கள் வகுப்பாசிரியர்களுடன்



தரம் 01 மாணவர்கள்



தரம் 02 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 03 மாணவர்கள்



தரம் 04 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 05 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சை

| ஆண்டு | தோற்றியோர் | 70 புள்ளிக்கு மேல் | 100 புள்ளிக்கு மேல் | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2006 | 13 | 06 | 03 | - |
| 2007 | 09 | 03 | 02 | 01 |
| 2008 | 06 | 03 | 01 | - |
| 2009 | 11 | 09 | 03 | 01 |
| 2010 | 10 | 08 | 06 | 01 |
| 2011 | 16 | 10 | 05 | - |
| 2012 | 12 | 10 | 05 | 01 |
| 2013 | 10 | 07 | 06 | 01 |
| 2014 | 15 | 13 | 11 | 03 |
| 2015 | 12 | 11 | 08 | 01 |
| 2016 | 16 | 11 | 08 | 01 |
| 2017 | 08 | 06 | 03 | — |
| 2018 | 14 | 12 | 10 | — |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்தி

எமது பாடசாலையில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் பல விசேட கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

- **தரம் 05 மாணவர்களுக்கு பல்வேறு வடிவங்களில் விசேட வகுப்புக்களை நடாத்தி சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளோம்.**
    - வலயக்கல்வித் திணைக்களப் பயிற்சிப் பரீட்சைகள்
    - மாகாணக்கல்வித் திணைக்களப் பயிற்சிப் பரீட்சைகள்
    - தினக்குரல் பயிற்சிப் பரீட்சைகள்
    - புலமைச்சுடர் பயிற்சிப் பரீட்சைகள்
    - மாலைநேர, விடுமுறைக்கால, இரவு வேளைகளில் வகுப்புக்கள் நடாத்துதல்.

எமது பாடசாலையில் எட்டுப் பண்புத்தரச் சுட்டிகளிலும் மாணவர் அடைவு மட்டம் 68.75 ஆக உள்ளது.

இவ்விசேட செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்கிய கல்வித் திணைக்களங்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், பெற்றோர்களுக்கும் மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- தரம் 3,4,5 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களில் கற்றலில் இடர்ப்படுவோருக்கு எழுத்தறிவூட்டல் வகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது
- மாதாந்த பரீட்சைகள்
- பெற்றோர்களுடன் மாணவர் கல்வி பற்றி அடிக்கடி கலந்துரையாடல்
- ஆரம்பக் கல்விக்குரிய பிரதான செயற்பாடாக கருதும் செயற்பட்டு மகிழ்வோம் செயற்பாடு நிகழ்வுகளில் பயிற்சி பெற்று எமது பாடசாலையில் இருந்த 2 அணியினர் போட்டியில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.
- தரம் 1,2இற்குரிய பல்மட்டச் செயற்பாடுகள் திருப்திகரமாக செயற்பட்டு வருகிறது.
- வலயமட்டத்தினால் நிகழ்த்தப்படும் அனைத்துப் போட்டிகளிலும் பயிற்சி வழங்கப்பட்ட போட்டிகளில் பங்குபற்றுதலும் குறிப்பிடத்தக்கது.
- பிள்ளை நேயத்திற்குரிய பண்புகளைக்கொண்ட பாடசாலை என்ற வகையில் A தரத்தில் தெரிவு செய்யப்பட்டது மட்டுமல்ல அவ்விடயங்கள் அனைத்தையும் தொடர்ந்து பேணி வருவதும் நடைமுறையில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டியில் பேச்சு து.சானுஜா, பாவேதம் சு.கனுஸ்கன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தரம் 01 மாணவன் த.நிவாஸ் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கல்வி அபிவிருத்தி உயர்மட்ட செயற்பாடுகள் (HOP)

வழமையான கற்றல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் திட்டமிட்ட உயர் கல்விச் செயற்பாடுகள் ஊடாக விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இச் செயற்திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மாணவர் செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது. இச்செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்கும் அனைவருக்கும் பாராட்டையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி(SBTD)

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியில் அதிபரும் எல்லா ஆசிரியர்களும் தமது முக்கியமான பணியான பண்புத்தரமுள்ள கற்பித்தலை மேற்கொள்வதற்காக, தரவட்டங்கள் ஊடாகவும் உயர்மட்டச் செயற்பாடுகளில் வளவாளர்களின் உதவியுடனும், கற்பித்தலுக்கு தேவையான தொடர்ச்சியான இற்றைப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஊடாக மாணவர்களின் கல்வி விருத்தியில் மாற்றத்தையும் ஏற்படுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் வகுப்பறை நேர்முகாமைத்துவத்தில் அனைத்து ஆசிரியர்களும் 30 மணித்தியால பயிற்சியை பெற்று மாணவர் கல்வியிலும் வகுப்பறை முகாமைத்துவத்தையும் சிறப்பாக செய்துவருகின்றார்கள்.

## முகாமைத்துவ அணி (SMT)

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் திட்டமிடல் மிகவும் முக்கியமான ஒன்றாகும். அந்தவகையில் எமது பாடசாலையின்உயர்விற்கு சிறந்த திட்டமிடல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிவரும் எமது முகாமைத்துவக் குழுவிற்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு எதிர்கால திட்டமிடல்களுக்கும் தங்களது ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ அணி (SMT)

1. திரு. ச.கிருஷ்ணன்
2. திருமதி. த.பிரபாகரன்
3. திருமதி. பி.பாஸ்கரன்
4. செல்வி.மா. கந்தசாமி
5. திருமதி.ம.முருகேஸ்வரன்
6. திருமதி.ப.இராசரத்தினம்
7. திருமதி.ரே.இந்திரராஜா



## மாணவ முதல்வர் சபை

எமது பாடசாலை மாணவர்களின் ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவ முதல்வர்சபை முன்னின்று செயற்பட்டு வருகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக்குழு.(S.D.C)

இக்கால கட்டத்தில் ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் முக்கியபங்கு வகிப்பது பாடசாலை அபிவிருத்திக் குழுவாகும். இந்த வகையில் பாடசாலையின் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் இக்குழு காத்திரமான பங்களிப்பை ஆற்றிவருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இக்குழுவிற்கு அனுசரணையாக விளங்கி பாடசாலையின் மேம்பாட்டிற்கு ஊன்று கோலாக விளங்குகின்றது. பழைய மாணவர்களும் இப்பாடசாலையின் அபிவிருத்திக்குத் துடிப்பான செயலாற்றுகைகளைச் செய்துவருகின்றனர்.

இந்தவகையில் பாடசாலையில் உள்ள முகாமைத்துவக் குழு, தரவட்டச் செயற்பாடு, கட்டாயக்கல்விக்குழு, சுகாதாரக்குழு, அனர்த்த முகாமைத்துவக்குழு, வரவழைத்தல்குழு, போன்ற அனைத்து குழுக்களும் பயனுறுதி மிக்கவகையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அபிவிருத்திக்குழு (S.D.C)

1. திரு.ச.கிருஷ்ணன் (தலைவர்)
2. திரு.சி.தர்மசீலன் (செயலாளர்)
3. திருமதி.ப.இராசரத்தினம் (பொருளாளர்)
4. திருமதி.த.பிரபாகரன் (ஆசிரியர்)
5. திருமதி.பி.பாஸ்கரன் (ஆசிரியர்)
6. திரு.தி.பிரகாஸ் (பெற்றோர்)
7. திருமதி.நி.யுகேந்தினி (பெற்றோர்)
8. செல்வி.செ.நிறோஜா (பழைய மாணவர்)
9. திரு.சி.றதீஸ் (பழைய மாணவர்)
10. திரு.சி.நாகராஜா (வலயப்பிரதிநிதி ஆசிரிய ஆலோசகர்)



பாடசாலை அபிவிருத்திக்குழு(S.D.C)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்க நிர்வாகம்



தலைவர் :- திரு ச.கிருஷ்ணன்.
செயலாளர் :- திரு க. நிதாகரன்
உபசெயலாளர் :- திருமதி பி.கிந்துஷா
பொருளாளர் :- திரு சி துசீபன்

நிர்வாக உறுப்பினர்கள்

1. திரு வே.யோககாந்தன்.
2. திரு சி.அம்ஜத்
3. திரு வி.துஷானந்
4. திரு வீ.தவக்குமார்
5. செல்வி இ.றொசாணி
6. செல்வி சி.தமிழவள்
7. செல்வி இ.நேருசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்தச் செயற்பாடுகள்

எமது பாடசாலையில் நாளாந்தம் காலை ஆராதனைகளும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூஜைகளும் இடம் பெற்று வருகின்றன. ஆசிரியர்களதும், மாணவர்களதும் நற்சிந்தனை இடம் பெற்று வருகின்றது. இதனை விட ஒவ்வொருநாளும் பத்திரிகை வாசித்தல், பொதுஅறிவு கேட்டல், ஆங்கிலம், சிங்களம், சொற்களுக்குரிய கருத்துக்களைக் கேட்டல், வாய்ப்பாடு, விரைவு கணிதச் செயற்பாடுகள், ஆகியன இடம்பெறுகின்றன. வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நான்கு நாட்களும் செயற்பட்டு மகிழ்வோம் செயற்பாடுகள் இடம் பெறுகின்றது.

தினமும் நேரஅட்டவணை மூலம் ஒவ்வொரு வகுப்பும் நூலகத்திற்குச் சென்று நூலகத்தை பயன்படுத்தி வருகின்றனர். தினமும் பாடசாலைக் கீதத்துடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிறைவு பெறுகின்றன.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

மாணவர்களின் ஆளுமையையும் தலைமைத்துவத்தையும் வளர்ப்பதில் பெரும் பங்கு வகிப்பது இணைப்பாட விதானச் செயற்பாடுகளாகும். இந்த வகையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்குரிய வலய மட்டப் போட்டிகளிலும், பாடசாலை மட்டப் போட்டிகளிலும், வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளிலும், பிரதேசசபைப் போட்டிகளிலும் பாடசாலை மட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்கு பற்றி சிறந்த பெறுபேறுகளையும் பெற்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றங்கள்

மாணவர்களின் அறிவுத்திறன் மனப்பாங்கை விருத்தி செய்யவும் வெளிப்படுத்தவும் இங்கு சில மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி மன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம் என்பன இயங்குகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் கூட்டங்கள் நடைபெற்று மாணவர்களது வெளிப்பாடுகளும் மேடையேற்றப்படுகின்றன. இம்மன்றச் செயற்பாடுகளை மாணவர்களே முன்னெடுத்துச் செல்வதும் குறிப்பிடத்தக்கது. இம் மன்றங்கள் மாதத்தில் ஒருமுறை கூடி தம் திறமைகளை வெளிக்காட்டி வருகின்றன.

## ஆரம்பக் கல்வி மன்றம்

பொறுப்பாசிரியர்கள் - திருமதி.ம.முருகேஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர்கள் - திருமதி.த.பிரபாகரன் திருமதி.ரே.இந்திரராஜா



## ஆங்கில மன்றம்

பொறுப்பாசிரியர் - செல்வி.க.மாலதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமா மன்றம்

பொறுப்பாசிரியர் - திருமதி.பி.பாஸ்கரன்



## கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர் - திருமதி.ப.இராசரத்தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான உணவு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இயங்கும் மேற்படி திட்டமானது கல்வி அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இயன்றவரையில் மாணவர்களுக்கு சத்தும் சுவையும் நிறைந்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வுணவிற்கு அனுசரணை வழங்கும் நிறுவனத்திற்கும், மேற்பார்வை செய்து ஒழுங்கமைக்கும் அலுவலர்களுக்கும், உணவைச் சிறந்த முறையில் ஆக்கி மாணவர்களுக்கு வழங்க உதவி வரும் பெற்றோர்களுக்கும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பெற்றோரதும் சமூகத்தினதும் நலன்விரும்பிகளினதும் பங்கு

எமது பாடசாலைக்கு பெற்றோர்கள், சனசமூக நிலையத்தினர், நலன் விரும்பிகள் எனப்பலரும் உதவி செய்து வருகின்றனர். பெற்றோர்கள் வருடாவருடம் ஆசிரியர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவது மட்டுமன்றி பெறுமதிமிக்க பரிசில்களையும் வழங்கி ஆசிரியர்களை கௌரவிக்கின்றார்கள். மோகனதாஸ் சனசமூக நிலையத்தினரும் ஆசிரியர் தின நிகழ்வில் கலந்து சிறப்பித்தது மட்டுமல்லாது பரிசில்களையும் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதைவிட இல்ல விளையாட்டுப்போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்த வகையில் இவ்வாறான பொதுப்பணிகளில் ஈடுபட்டு வரும் அனைவரையும் உளமாரப் பாராட்டுவதுடன் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு கிடைத்துவரும் உதவிகள்.

- **கால் கோள் நிதியம்**

எமது பாடசாலைக்கு 2006ம் ஆண்டிலிருந்து தரம் I இல் அனுமதி பெறும் மாணவர்களுக்கு கால்கோள் விழாவின் போது திரு.திருமதி.லியோன் புஸ்பராணி அவர்கள் வங்கியில் பணம்வைப்பிலிட்டு வருகின்றார். அதுபோல் இவ்வருடமும் தரம் 1இல் அனுமதி பெற்ற 19 மாணவர்களுக்கும் (19000/-) பத்தொன்பதாயிரத்தை வங்கியில் வைப்பிலிட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவி செய்துள்ளார்.

- **தரம் 5 புலமைப்பரிசில் நிதியம் :-**

| | | |
|---|---|---|
| I. | திரு.க.மணிதீபன்<br>(பழைய மாணவனும் வைத்தியரும்) | - 5000.00 |
| II. | திரு.த.அப்புத்துரை<br>(ஓய்வு நிலை அதிபர்) | - 1000.00 |
| III. | திரு.சி.செல்வராசா<br>(சதீத் பட உரிமையாளர் பாடசாலை நலன்விரும்பி) | - 1000.00 |
| IV. | திரு.திருமதி.லியோன் புஸ்பராணி<br>(வைத்திய கலாநிதி) | - 1000.00 |

- **கனடா நிதியம்**

கனடா வாழ் நலன்புரிச்சங்கம் வருடா வருடம் 4 மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு தலா 5000/= வை உதவி வழங்கி வருகின்றது.

- அண்மையிலுள்ள பாடசாலைகளில் சிறந்த பாடசாலைக்கான நிதி ஒதுக்கீடுகள்.
  1. Essential minor Repairs
  2. Providing Sanitary & Water Supply Facilities

**பாடசாலைக்கு கிடைக்கும் வேறுவகையான உதவிகள்.**

1) திரு.செ.மழலைச்செல்வன் அவர்கள் கடந்த 5 வருடங்களாக இல்ல விளையாட்டுப் போட்டிக்காக பரிசில் வழங்குவதற்கான பண அன்பளிப்பை வழங்கி வந்தார். தற்போது பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

2) 2017ம் ஆண்டில் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான முழுச்செலவுகளையும் பழைய மாணவர் சங்கத்தினரே பொறுப்பேற்று சிறப்பாக நடத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பாடசாலை அழகுபடுத்தல் செயற்பாட்டால் மண்டபத்திற்குரிய வர்ணம் பூசுதலுக்கான செலவான 20000/- திரு.தி.பிரஜீவ் அவர்கள் (இப்பாடசாலையின் பழைய மாணவர்) அன்பளிப்புச் செய்துள்ளார்.

4) இல்லவிளையாட்டுப் போட்டியில் மேலதிக பரிசுப்பொருளாக வெளிநாட்டில் இருந்து வருகை தந்த எமது பாடசாலை நலன் விரும்பியான திரு.இரஞ்சிதம் ரவீந்திரன் எல்லா மாணவர்களுக்கும் (டிபன் பொக்ஸ்)யை அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

5) எமது பாடசாலையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளுக்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்த அரச அலுவலர்கள், நலன் விரும்பிகள், பொது அமைப்புகளைச் சார்ந்தவர்கள், மற்றும் வெளிநாட்டுப் புலம்பெயர் உறவுகள் ஆகியோர் தாமே விரும்பி முன்வந்து பொருளாகவோ பணமாகவோ அன்பளிப்புச் செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

6) எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க உருவாக்கத்திற்கு வித்திட்டு வரும் எமது பாடசாலையின் பழைய மாணவனான திரு.சி.தயாளன் அவர்கள் இவ்வருடத்திற்கான பரிசில் தினத்திற்கு உரிய முழுச்செலவையும் பொறுப்பேற்று செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## எமது பாடசாலையின் வளத்தேவைகள்

* அதிபர் அலுவலகம்
* பிரதான மண்டபம்
* விளையாட்டு மைதானம்
* நூலகம்
* ஆசிரியர் ஓய்வு அறை
* நவீன கற்பித்தல் சாதனமும், அதற்கான அறையும்
* வகுப்பறை
* பிரதி எடுப்பான்

ஆகிய வளத்தேவைகள் இருந்தும் முக்கிய தேவைகளைக் கருத்திற்கொண்டு ஆவண செய்யுமாறு உரியவர்களிடம் வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அன்பான அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் விருந்தினர்கள் அனைவருக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், ஓய்வுபெற்ற அதிபர்களுக்கும், அயற்பாடசாலை அதிபர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கும், பெற்றோர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், மற்றும் நிதி, பொருள், சரீர உதவிகளை வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இன்றைய இந்நாளில் பாடசாலை சமூகத்தின் சார்பில் அதிபர் என்ற வகையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது பாடசாலை பழையமாணவர் சங்கத்திற்கு வித்திட்டவரும், பழைய மாணவருமான திரு.சி.தயாளன் அவர்கள் இவ்வருடத்திற்கான பரிசளிப்பு நிகழ்விற்கான முழுச்செலவையும் பொறுப்பேற்று நடத்தியமைக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், இன்றைய பரிசில் நாள் சிறப்புடன் அமைய பல கலை நிகழ்வுகளையும் நெறிப்படுத்திய ~~பழைய மாணவர்களுக்கும்~~ பாடசாலை ஆசிரியர்களுக்கும் விசேடமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.. மற்றும் இப்பரிசில் நாள் நிகழ்விற்கான கையேட்டினை அச்சிட்டுத்தந்த ~~திருமதி.சுதர்சன் தயாளினி~~ அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்..

மேலும், எமது பாடசாலையின் பௌதீக வள கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பக்கபலமாக நின்று உழைக்கும் எமது பாடசாலை அபிவிருத்திக்குழு, அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.ச.கிருஷ்ணன்**
(பாடசாலை முதல்வர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# List of Tutorial Staff – 2017

| NO | NAME | Qualification | Grade |
|---|---|---|---|
| 1 | Mr.S.Krishnan | Sp.Trained | SLPS-III |
| 2 | Mrs.T.Pirapakaran | B.A (Hons) Dip.in Edu Distinction | SLTS-1 |
| 3 | Mrs.P.Baskaran | Sp.Trained(Primary) | SLTS-2.II |
| 4 | Miss.K.Malathy | Sp.Trained(Primary) | SLTS-2 |
| 5 | Mrs.M.Murugeswaran | Sp.Trained(Primary) | SLTS-I |
| 6 | Mrs.P.Rajaradnam | Sp.Trained(Primary) | SLTS-2-I |
| 7 | Mrs.R.Indrarajah | Dip in Edu- Primary | SLTS-2-II |



அதிபரும் மாணவத் தலைவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் பெறும் மாணவர் விபரம்

### தரம் - 01 (2017)

1. த.ஷிரிசிகன்
2. ச.மேனுஷன்
3. த.நிகாஸ்
4. த.நிவாஸ்
5. சு.அஸ்வின்
6. பி.பிரணீஷ்
7. அ.அனோஜ்சன்
8. நீ.அபிநயன்
9. ச.அட்ஷயா
10. அ.தனுஸ்கா
11. ச.உபேசினி
12. ஜெ.ரக்சாளினி
13. நி.பபிதா
14. வி.கிசானா
15. ப.அஸ்மிதா
16. பி.கிஷோமியா
17. பி.பிரணீஷ்கா
18. வி.கஜன்ஷிகா
19. க.லோஜிதா

### தரம் - 01 (2016)

| இல | பெயர் | தேர்ச்சி | பாடம் |
|---|---|---|---|
| 01 | சி.ஜெசுூ | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 02 | து.கவிவேந்தன் | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 03 | சு.ஹரிராம் | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 04 | வ.தனோஜன் | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 05 | க.பமிர்ஷன் | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 06 | வ.ஹஜீரன் | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 07 | அ.அலோஜிதா | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 08 | த.விதுசாளினி | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 09 | த.நிவர்சா | சிறப்புத் தேர்ச்சி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 10 | ஜி.ஜீவராஜ் | தேர்ச்சி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 02 (2016)

| இல | பெயர் | பாடம் |
|---|---|---|
| 01 | ற.ஜிவிசன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல் |
| 02 | க.பிரவீன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 03 | க.பிரணாப் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 04 | சி.ஜெஷீரன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 05 | க.விக்ரானந் | தமிழ் |
| 06 | த.அக்ஷயன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 07 | த.யதூசன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 08 | அ.டிலுஜன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 09 | ஜெ.கவின்சா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 10 | கு.திலக்சனா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 11 | சி.பானுஜா | தேர்ச்சி |
| 12 | த.பிரதீஷா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 13 | சி.மதுஷா | தேர்ச்சி |

## தரம் - 03 (2016)

| இல | பெயர் | பாடம் |
|---|---|---|
| 01 | ந.அபிசாக் | சமயம்,தமிழ |
| 02 | பா.ஸ்ரேகன் | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 03 | ப.தனிஸ்ரன் | சமயம்,தமிழ்,சுற்றாடல் |
| 04 | சு.கனுஸ்கன் | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 05 | மெ.அபிநாத் | சமயம்,தமிழ |
| 06 | ப.நேருஜன் | சமயம்,தமிழ்,ஆங்கிலம் |
| 07 | நி.டனுஜா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 08 | வி.அபிசாளினி | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 09 | ச.திருஷிகா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 10 | மு.கரிணி | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 11 | ஜெ.குயிலிசை | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 12 | து.சானுஜா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 13 | த.திஷானி | சமயம்,தமிழ்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 14 | ஸ்ரீ.கபிசன் | தேர்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 04 (2016)

| | | |
|---|---|---|
| 01 | சு.கஜானன் | சமயம்,தமிழ்,கணிதம் |
| 02 | கி.இசைவானன் | சமயம்,தமிழ் |
| 03 | த.அபிசாளன் | சமயம்,தமிழ் |
| 04 | த.கரீஸ் | சமயம்,தமிழ்,ஆங்கிலம்,கணிதம் |
| 05 | சு.டிலக்சன் | தேர்ச்சி |
| 06 | அ.லக்ஸ்மிகன் | தமிழ் |
| 07 | ஸ்ரீ.ஜோர்நிக்ஷன் | சமயம்,தமிழ் |
| 08 | த.டனிஸ்ரன் | தேர்ச்சி |

## தரம் - 05 (2016)

| | | |
|---|---|---|
| 01 | சு.திகழோன் | தமிழ் சிறப்புத் தேர்ச்சி |
| 02 | ர.மாதுரியன் | தமிழ் சிறப்புத் தேர்ச்சி |
| 04 | ஜெ.பகலவன் | தமிழ் சிறப்புத் தேர்ச்சி |
| 05 | பி.அபிஷன் | தமிழ் சிறப்புத் தேர்ச்சி |
| 06 | கு.யானுஷன் | தமிழ், சமயம் சிறப்புத் தேர்ச்சி |
| 07 | வ.கபில்ராஜ் | தேர்ச்சி |
| 08 | கு.றகீம் | தேர்ச்சி |
| 09 | ச.சங்கீதன் | தமிழ் |
| 10 | பெ.நிறஞ்சன் | தேர்ச்சி |
| 11 | அ.டினேஸ்குமார் | தேர்ச்சி |
| 12 | கு.சாய்தீபிகா | தேர்ச்சி |
| 13 | பி.கவிஷாஜினி | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 14 | பி.சேருஜா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 15 | வி.யானுஷா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம் |
| 16 | கு.கலைக்சனா | தேர்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியோர் விபரம்.2017

தரம் - 01:-

| இல | பெயர் | பங்கு பற்றிய போட்டிகள் |
|---|---|---|
| 01 | த.நிவாஸ் | சித்திரம் |

தரம் - 02:-

| இல | பெயர் | பங்கு பற்றிய போட்டிகள் |
|---|---|---|
| 01 | த.நிவர்ஷா | விரைவு கணிதம், சித்திரம் |
| 02 | சு.ஹரிராம் | விரைவு கணிதம் |

தரம் - 03

| இல | பெயர் | பங்கு பற்றிய போட்டிகள் |
|---|---|---|
| 01 | க.பிரவீன் | சித்திரம்,விரைவு கணிதம்,தமிழ்,சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 02 | க.பிரணாப் | English Recitation, தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 03 | சி.ஜெஷீரன் | English Copy writing, தமிழ் சிறப்புத்தேர்ச்சி |
| 04 | த.பிரதீஷா | விரைவு கணிதம், தமிழ்,சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 05 | த.அக்ஷயன் | தமிழ் சிறப்புத்தேர்ச்சி |

தரம் - 04

| இல | பெயர் | பங்கு பற்றிய போட்டிகள் |
|---|---|---|
| 01 | ந.அபிசாக் | தமிழ் சிறப்புத்தேர்ச்சி |
| 02 | பா.ஸ்ரேகன் | தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 03 | சு.கனுஸ்கன் | பாவோதல், தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 04 | நீ.டனுஜா | விரைவு கணிதம், தமிழ சிறப்புத்தேர்ச்சி |
| 05 | வி.அபிசாளினி | தமிழ சிறப்புத்தேர்ச்சி |
| 06 | ச.திருஷிகா | தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 07 | மு.கரினி | விரைவு கணிதம், இசைவும் அசைவும்,தமிழ் சமயம் சிறப்புத்தேர்ச்சி,English Recitation, |
| 08 | ஜெ.குயிலிசை | English Copy writing, தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 09 | து.சாணுஜா | தமிழ்தினம் பேச்சு,தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 10 | த.திஷானி | சித்திரம், தமிழ், சமயம் சிறப்புத்தேர்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 05

| இல | பெயர் | பங்கு பற்றிய போட்டிகள் |
|---|---|---|
| 01 | சு.கஜானன் | சித்திரம், பொது அறிவு, சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 02 | கி.இசைவாணன் | விரைவு கணிதம், பொது அறிவு, English Copy writing, சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 03 | த.அபிசாளன் | பொது அறிவு,சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 04 | த.கரீஸ் | விரைவு கணிதம், பொது அறிவு, English Recitation, வாசிப்பு(தமிழ்), சமயம் சிறப்புத்தேர்ச்சி |
| 05 | ஸ்ரீ.ஜோர்நிக்ஷன் | பொது அறிவு,தமிழ் சிறப்புத்தேர்ச்சி |

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் பரிசில் பெறும் மாணவர்கள் விபரம்

- வெட்டுப்புள்ளிக்கு மேல்:- பி.கவிஷாஜினி 155புள்ளிகள்
- **100 புள்ளிகளுக்கு மேல்:-**

| இல | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | சு.திகழோன் | 146 புள்ளிகள் |
| 02 | பி.அபிஷன் | 143 புள்ளிகள் |
| 03 | ஜெ.பகலவன் | 142 புள்ளிகள் |
| 04 | வி.யானுஷா | 140 புள்ளிகள் |
| 05 | பி.சேருஜா | 132 புள்ளிகள் |
| 06 | ர.மாதுரியன் | 131 புள்ளிகள் |
| 07 | அ.அலோஜிதன் | 131 புள்ளிகள் |

- **70 புள்ளிகளுக்கு மேல்:-**

| இல | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | ச.சங்கீதன் | 98 புள்ளிகள் |
| 02 | அ.டினேஸ்குமார் | 93 புள்ளிகள் |
| 03 | கு.கலைக்சனா | 71 புள்ளிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 60 புள்ளிகளுக்கு மேல்:-

| இல | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | கு.யானுஷன் | 67 புள்ளிகள் |
| 02 | வ.கபில்ராஜ் | 64 புள்ளிகள் |
| 03 | பெ.நிறஞ்சன் | 63 புள்ளிகள் |
| 04 | கு.சாய்தீபிகா | 60 புள்ளிகள் |

---

- வலய மட்டத்தில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவன்:-

த.நிவாஸ் - சித்திரம் (வலயமட்ட தெரிவு)

- கோட்ட மட்டத்தில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்கள்:-

து.சானுஜா – பேச்சு (கோட்ட மட்ட தெரிவு)
சு.கனுஸ்கன் - பாவோதல் (கோட்ட மட்ட தெரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- உயிரே போகும் நிலை வந்தாலும் தைரியத்தை விடாதே ! நீ சாதிக்க பிறந்தவன் துணிந்து நில் , எதையும் வெல்.

- வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைதனம்.

- இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.


- பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.

- பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

—சுவாமி விவேகானந்தா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# -நன்றி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து; அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

*வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைதனம்.

*பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.

*பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

*அடிமைகள் எல்லோருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையே ஆகும்.

*பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

*உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org